செய்தி வெளியீடு எண்: 22 நாள்: 12.01.2013

# செய்தி வெளியீடு

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 15.01.2013 அன்று தேனி மாவட்டம் லோயர் கேம்பில் கர்னல் ஜான் பென்னிகுவிக் அவர்களின் நினைவு மணிமண்டபத்தை திறந்து வைக்கிறார்கள்.

தமிழ்நாட்டு மக்களின் உணவுத்தேவைகளை பூர்த்தி செய்வதில் தென் தமிழக மாவட்டங்களான தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, மற்றும் ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. மேற்குத் தொடர்ச்சி மலையில் பெய்யும் மழைநீர், முல்லையாறு மற்றும் பெரியாறு என்ற ஆறுகளாக கேரள மாநிலத்தில் ஓடி வீணாகக் கடலில் கலப்பதைத் தவிர்க்க உருவாக்கப்பட்ட முல்லைப்பெரியாறு அணை மூலம் இந்த மாவட்டங்களுக்கு பாசனத்திற்குத் தேவையான தண்ணீர் கிடைக்கப் பெறுகிறது. மேலும், இந்த மாவட்டங்களின் குடிநீர் தேவையும் இந்த அணை மூலம் பெருமளவு நிறைவு செய்யப்படுகிறது. இந்த முல்லைப்பெரியாறு அணை பிரிட்டிஷ் பொறியாளர் கர்னல் ஜான் பென்னிகுவிக் அவர்களால் 1895 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டது.

அன்னாரது பணியைப் பாராட்டும்வகையிலும், தமிழக மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவிக்கும் வகையிலும், கர்னல் ஜான் பென்னிகுவிக் அவர்களது வெண்கலத் திருவுருவச் சிலையுடன் கூடிய நினைவு மணிமண்டபம் நிறுவப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கடந்த 08.01.2012 அன்று அறிவித்தார்கள்.

இந்த நினைவு மணிமண்டபம், இயற்கைச்சூழல் நிறைந்த மலைப்பாங்கான இடத்தில் அனைவரும் கண்டுகளிக்கக் கூடிய வகையில் எழில்மிகு தோற்றத்தில் ரூபாய் 1 கோடியே 25 லட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இந்த நினைவு மணிமண்டபத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 15.01.2013 அன்று தேனி மாவட்டம் லோயர் கேம்பில் திறந்து வைக்கிறார்கள்.

மேலும், தமிழ்ப் பேரறிஞர்கள் பெயராலும், தன்னலமற்ற தலைவர்கள் பெயராலும் தமிழ்நாடு அரசு ஏற்படுத்தியுள்ள திருவள்ளுவர் விருது உட்பட பல்வேறு விருதுகளைப் பெற்றிட தகுதியான பெருமக்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

விருதுகள் பெறுவோர் பற்றிய விவரம் வருமாறு :

| | | |
|---|---|---|
| திருவள்ளுவர் விருது | : | கலைமாமணி<br>டாக்டர் ந.முருகன்(சேயோன்) |
| தந்தை பெரியார் விருது | : | டாக்டர் கோ.சமரசம் |
| அண்ணல் அம்பேத்கர் விருது | : | திரு.தா.பாண்டியன் |
| பேரறிஞர் அண்ணா விருது | : | திரு.கே.ஆர்.பி.மணிமொழியன் |
| பெருந்தலைவர் காமராசர் விருது | : | திரு.சிங்காரவடிவேல் |
| மகாகவி பாரதியார் விருது | : | பாரதிக் காவலர் கு.இராமமூர்த்தி |
| பாவேந்தர் பாரதிதாசன் விருது | : | பேராசிரியர். முனைவர் சோ.ந.கந்தசாமி |
| தமிழ்த்தென்றல் திரு.வி.க.விருது | : | முனைவர் திருமதி பிரேமா நந்தகுமார் |
| முத்தமிழ்க்காவலர்<br>கி.ஆ.பெ.விசுவநாதம் விருது | : | முனைவர் நா.இராசகோபாலன் (மலையமான்) |

மேற்காணும் விருதுகள் 15.1.2013 அன்று தேனி மாவட்டம் லோயர் கேம்பில் நடைபெறும் கர்னல் ஜான் பென்னிகுவிக் நினைவு மணிமண்டபம் திறப்பு விழா, திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழக அரசின் விருதுகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் வழங்கப்படும்.

விருது பெறுவோர், தலா 1 லட்சம் ரூபாய்க்கான காசோலை, ஒரு சவரன் தங்கப்பதக்கம் மற்றும் விருதுக்கான தகுதியுரைச் சான்றிதழ் ஆகியவை வழங்கி கௌரவிக்கப்படுவார்கள். மேலும், அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி அரசாணைகள் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் வழங்கப்படும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**